செ.வெ.எண்: 24 நாள்:25.10.2021

**மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் திங்கட்கிழமைதோறும் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்றையதினம் 25.10.2021 மாவட்டஆட்சித்தலைவர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொதுமக்கள் பட்டாமாறுதல், புதிய குடும்பஅட்டை, ஆக்கிரமிப்பு அகற்றுதல், கல்விக்கடன், வீட்டுமனைப்பட்டா, முதியோர் ஓய்வூதியம், விதவைஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்த 96 மனுக்களை மாவட்டஆட்சித்தலைவர் அவர்களிடம் அளித்தனர். பொதுமக்களிடம் விசாரித்து மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்டஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை வழங்கி குறித்த காலத்திற்குள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதனைத்தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 3 நபர்களுக்கு சுயதொழில் தொடங்க வங்கிகடன் மானியமாக தலா ரூ.25 ஆயிரம் மதிப்பிலான காசோலைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் ஆவின் நிறுவனம் சா்பில் 2 நபர்களுக்கு ஆவின் பாலகம் தொடங்க ரூ.1 லட்சம் மதிப்பிலான பால் குளிரிடும் பெட்டகம் மற்றும் விளம்பர பலகை அடங்கிய பொருட்களையும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் சார்பில் 6 நபர்களுக்கு தலா ரூ.1000 முதியோர் ஓய்வூதிய தொகை பெறுவதற்கான ஆணைகளையும் என மொத்தம் ரூ.1 லட்சத்து 81 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.முருகதாஸ், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திரு.வாசுதேவன், உதவி திட்ட அலுவலர் திரு.சங்கர், மாவட்ட ஆட்சியரக மேலாளர் திரு.சங்கர் உள்பட பல்வேறு துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.